எம்.சி.ஓ.பி எண்: 2973,2974/2025 தேதி: 29.04.2026

மசா. : 1

பெயர் : மோனிஷா

க /பெ. : கன்னியப்பன்

வயது : 22

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

06.03.2025 அன்று இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கரவாகனம் பதிவெண் TN–09–CY–4306 வாகனத்திற்கு விபத்து நடந்த தேதியன்று காப்பீடு நிலுவையில் உள்ளதால் இரண்டாவது எதிர்மனுதாரர்தான் இழப்பீடு தரவேண்டும் என்று சொன்னால் இரண்டு எதிர்மனுதாரரும் தரவேண்டும்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து காவல் நிலையத்தில் என் அம்மா புகார் கொடுத்தார் என்றால் சரி. அவர் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்த உடன் எஸ்ஆர்எம் மருத்துவமனைக்கு சென்றேன். அந்த மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றதற்கு விபத்து பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பத்தி5ல் கூறியவாறு எஸ்ஆர்எம் கல்லூரியில் எம்எஸ்சி முதலாம் ஆண்டு படித்துவருவதற்கான ஆவணம்தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. விபத்தின் காரணமாக என்னுடைய படிப்பை தொடர இயலவில்லை என்று ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பத்தி 4ல் கூறியவாறு போக்குவரத்து செலவு ரூபாய் 50ஆயிரம் ஆனதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மசாஆ 12ல் உண்மை தன்மை குறித்து அந்த மருத்துவமனையை சேர்ந்தவர்களை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரி. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியாமல் சென்றேன் என்றாலும் அதனால்தான் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பத்தி 6 ல் கூறியுள்ள உபாதைகளுக்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு உதவியாளர் செலவாக ரூபாய் 25ஆயிரம் ஆனதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 16.08.2025க்கு பிறகு தொடர்சிகிச்சை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவைகளை தாக்கல் செய்தால் நான் பயணம் செய்த வாகன ஓட்டியின் அஜாக்கிருதைதான் இந்த விபத்திற்கு காரணம் என்பது தெரியவரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து நான் அமர்ந்து சென்ற இருசக்கரவாகன ஓட்டியின்

அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.